முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

## O.S. No.7/2019

2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் செவ்வாய்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன் படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**பி.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கமாலுதீன் | ஜாதி | |
| தந்தையார் பெயர் | பக்கிர்முகமது | மதம் | |
| கிராமம் | நீடாமங்கலம் | தொழில் | |
| வட்டம் | நீடாமங்கலம் | வயது | 68 |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 3-ம் தரப்பினர். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன். பி.சா.ஆ.2 பாகப் பிரிவினை ஆவணத்தில் ஜமாத் தலைவர் என்ற முறையில் குடும்பத்தில் ஏற்படுத்தப்பட்ட பாகப் பிரிவினை குறித்து பேசி எழுதப்பட்ட

ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

30.08.2014 அன்று பாகப் பிரிவினை செய்து கொள்ள வேண்டி ரசூலுதீன் கையெழுத்திட்டு விண்ணப்பம் கொடுத்தாரா என்றால் ரசூலுதீன் கொடுக்கவில்லை அப்துல் கபூரின் மனைவி மும்தாஜ் பேகம் மனு கொடுத்தார். முதல் விசாரணையில் ரசூலுதீன் என்னை அணுகி மனு கொடுத்ததாக தவறான சங்கதிகளை சொல்லி நிரூபண ஆணையுறுதி பத்திரம் கொடுத்துள்ளேன் என்றால் ரசூலுதீன் மனு கொடுத்ததாக நான் சொல்லவில்லை. பி.சா.ஆ.2 பாகப் பிரிவினை ஆவணத்தில் ரசூலுதீன் கையெழுத்து போட்டுள்ளாரா என்றால் பாகப் பிரிவினை ஆவணத்தில் ரசூலுதீன் கையெழுத்து போடவில்லை என்றும் ஜமாத்தில் உள்ள மினிட் ஆவணத்தில் ரசூலுதீன் கையெழுத்து போட்டுள்ளார் என்று கூறுகிறார். என்னுடைய சாட்சிய நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் ரசூலுதீன் மினிட் ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வழக்கிற்காக முதன் முறையாக இவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பேச்சுவார்த்தை நடைபெற்ற போது ரசூலுதீன் ஊரில் இருந்தார். பி.சா.ஆ.2 பாகப் பிரிவினை ஆவணத்தில் எந்த தேதியில் பேச்சு வார்த்தை நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

பேச்சு வார்த்தை பற்றி மினிட் ஆவணத்தில் உள்ளது என சாட்சி தானாக கூறுகிறார். பி.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல் எந்த பேச்சு வார்த்தையும் நடைபெறவில்லை என்றும் அதனால்தான் பேச்சுவார்த்தை நடந்த தேதி பற்றி அந்த ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. பேச்சு வார்த்தை விபரங்கள் மற்றும் ஆவணம் எழுதப்பட்ட விபரங்கள் மினிட் புக்கில் சொல்லப்பட்டுள்ளது என பி.சா.ஆ.2 ஆவணத்திலோ அல்லது என்னுடைய சாட்சிய நிரூபண ஆணையுறுதி ஆவணத்திலோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. வழக்கிற்காக இந்த விபரத்தை முதன் முறையாக பொய்யாக நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2014 ஆம் ஆண்டிற்கு பிறகு ரசூலுதீனை அழைத்து பி.சா.ஆ.2 ஆவணத்தில் கையொப்பமிடுமாறு கேட்டீர்களா என்றால் ரசூலுதீனை கேட்டோம். ரசூலுதீன் மினிட் புக்கில் ஏற்றுக் கொள்கிறேன் என்று கையெழுத்து போட்டு விட்டேன் என்று சொன்னார். அதுபோல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணத்தை 1 முதல் 4 பிரதிவாதிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நாங்கள் முன் தேதியிட்டு ஒரு ஆவணம் தயாரித்து அதை 1-ம் பிரதிவாதியிடம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணத்தை எழுதும்போது நகையை பிரித்துக் கொண்டதாக சொல்லியுள்ளோமா என்றால் எழுதி வாங்கியுள்ளோம். இதுபோன்ற ஆவணத்தை

பிரதிவாதி மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் சாட்சி நாங்கள் எப்படி நீதிமன்றத்தில் ஆவணத்தை தாக்கல் செய்ய முடியும் என கூறுகிறார். அதுபோன்ற ஆவணமே ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்தும்போது தற்போது ஏற்படுத்தப்பட்ட பாகப் பிரிவினை ஒரு தற்காலிக ஏற்பாடு என்று நாங்கள் கூறவில்லை. பி.சா.ஆ.2 ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. பி.சா.ஆ.2 ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்பதால்தான் பாகப் பிரிவினை ஏற்பட்டது என மோசடியாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

M SHANTHI

Digitally signed by M SHANTHI
DN: cn=M SHANTHI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.02.13 17:12:04 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.